# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்

சுட்டெண் ..................................................... தரம்: 07 நேரம் - 2.00 மணித்தியாலம்

பகுதி I

- **பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. நவீன கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர்
   1) சாள்ஸ் பபேஜ் 2) பஸ்கால் 3) வொன் நியுமன் 4) அடா லவ்லேஸ்

2. கணினியின் சிறப்பியல்பாக கொள்ள முடியாதது எது?
   1) செம்மை 2) தேக்கக் கொள்திறன் 3) நம்பகமின்மை 4) வேகம்

1) உள்ளீட்டுச் சாதனத்திற்கு உதாரணமாக அமையக் கூடியது எது?
   1) வருடி 2) தெரிவிப்பி 3) அச்சுப்பொறி 4) பல்லூடக எறிவை

2) மையமுறைவழி அலகின் கூறு அல்லாதது.
   1) கட்டுப்பாட்டு அலகு 2) எண்கணித தர்க்க அலகு
   3) நினைவக பதிவேடுகள் 4) முறைமை அலகு

3) .................................................... முதன்மை நினைவகமாகும்.
   1) வன்வட்டு 2) வாசிப்பு மட்டும் நினைவகம்
   3) இறுவட்டு 4) பளிச்சீட்டு நினைவகம்

4) உட்பொதிந்த (Embedded) கணினி முறைமைகளைக் கொண்ட சாதனங்களின் தொகுதி எது?
   1) செல்லிடத்தொலைபேசி, உழவு இயந்திரம்
   2) துணிச் சலவைப் பொறி, செல்லிடத் தொலைபேசி, துவிச்சக்கரவண்டி
   3) நவீன தொலைக்காட்சிப் பெட்டி, நவீன மோட்டார் வாகனம், துவிச்சக்கரவண்டி
   4) நவீன தொலைக்காட்சிப் பெட்டி, நவீன மோட்டார் வாகனம், செல்லிடத் தொலைபேசி

5) பின்வருவனவற்றுள் எது பணிச்செயல் முறைமைக்கு உதாணரமன்று?
   1) Windows 2) Redhat 3) Mac OS 4) Paint

6) பின்வரும் சேமிப்பு சாதனங்களில் எது திண்ம நிலைச் சாதனமாகும் ?
   1) பளிச்சீட்டு நினைவகம் 2) DVD
   3) வன்தட்டு 4) மேற்கூறிய யாவும்

7) ஆவணம் ஒன்றை முதன் முதலாக சேமிக்கும் போது தெரிந்தெடுக்கப்பட வேண்டிய கட்டளை ?
   1) Ctrl 2) Copy 3) Open 4) Save as

8) கோப்பு ஒன்றை சேமிப்பதற்கான குறுக்குச் சாவி யாது?
1) Ctrl + C 2) Ctrl + X 3) Ctrl + S 4) Ctrl + V

9) திண்ம தேக்கச் சாதனத்திற்கு உதாரணமாக அமையக் கூடியது எது?
1) நினைவக அட்டை 2) வன்வட்டு 3) புளூறே 4) இறுவட்டு

10) கணினியில் தற்காலிகமாக அழிக்கப்படும் கோவைகள் சேமிக்கப்படும் இடம்
1) My Computer 2) Recycle Bin 3) Desktop 4) Document

11) ஒளியியல் தேக்கச் சாதனமாக கருதக்கூடியது எது?
1) Zip disk
2) பளிச்சீட்டு கருவி (Pen Drive)
3) Blu - Ray disk
4) நினைவக அட்டை

12) சுட்டிகைத் தொலைபேசிகளில் பயன்படுத்தப்படும் பணிச்செயல் முறைமை அல்லாதது எது?
1) Android 2) iOS 3) Windows 4) MacOS

13) கணினி ஆய்வுகூடத்தில் செய்யக்கூடாதது ?
1) பாதணிகளைக் கழற்றி உள்ளே செல்லல்
2) விளையாடுதல்
3) தூசுகளைத் தட்டுதல்
4) உணவுப் பொருட்களை உள்ளே கொண்டு செல்வதைத் தவிர்த்தல்

14) மனிதனுக்கும் கணினிக்கும் இடையே தொடர்பாடலை ஏற்படுத்துவது
1) இலத்திரனியல் விரிதாள்
2) மைய முறைவழி அலகு
3) பணிச்செயல்முறைமை
4) கட்டுப்பாட்டு அலகு

15) கோப்பின் முக்கிய இரு பகுதிகள் முறையே
1) பெயர், வடிவம் 2) பருமன், அளவு 3) பெயர், நீட்சி 4) நீட்சி, வடிவம்

16) கணினியின் இயல்பு அல்லாதது
1) வேகம் 2) நுண்ணறிவு 3) செயற்றிறன் 4) செம்மை

17) பாய்ச்சல் கோட்டுப் படத்தில்  குறிப்பது
1) ஆரம்பம் 2) முடிவு 3) உள்ளீடு 4) முறைவழியாக்கல்

18)  இக் குறியீடு பாய்ச்சற் கோட்டுப் படத்தில் எதனைக் குறிக்கின்றது ?
1) ஆரம்பம் முடிவு 2) செயற்படுத்தல் 3) தீர்மானம் எடுத்தல் 4) உள்ளீடு வெளியீடு

19) உள்ளீட்டு சாதனமாகவும் வெளியீட்டு சாதனமாகவும் பயன்படுவது எது
1) தெரிவிப்பி 2) சுட்டி 3) தொடுதிரை 4) அச்சுப்பொறி

20) IOT என அழைக்கப்படுவது
1) சர்வதேச வலையமைப்பு
2) பொருட்களின் இணையம்
3) இணையத் தொழினுட்பம்
4) மின்வர்த்தகம்

**($20 \times 2 = 40$ புள்ளிகள்)**

## பகுதி - II

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

1. 1) CPU யின் பிரயோகங்கள் 2 தருக ?
   2) CPU இன் மூன்று பகுதிகளையும் தந்து அவற்றின் தொழில்களையும் தருக ?
   3) மைய முறைவழி அலகு பொருத்தப்பட்டிருக்கும் பகுதி எது ?
   4) CPU யின் விரிவு யாது ?

( 2 + 4 + 2 + 2 = 10 புள்ளிகள்)

2. தரப்பட்ட செயல்களுக்கு பொருத்தமான சாவிப்பலகை குறுக்குவழிகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

(Ctrl + C, Ctrl + W, Ctrl + X, Ctrl + V, Ctrl + O)

செயல்

1) சாவிப்பலகை குறுவழி கோப்பை திறத்தல் :.........................................
2) கோப்பை மூடிவிடல் :............................................................
3) கோப்பை நகல் செய்தல் :............................................................
4) கோப்பை ஒட்டுதல் :............................................................
5) கோப்பை வெட்டுதல் :............................................................

(5 × 2 = 10 புள்ளிகள்)

3. 1) கணினியில் பிறழ் பொருள்களின் தீங்குகளை தவிர்ப்பதற்கும் இழிவாக்குவதற்குமான நடவடிக்கைகள் 4 தருக.
   2) கணினியில் பிறழ் பொருள்களினால் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான காரணங்கள் 3 தருக.
   3) கணினியில் உள்ள தகவல்களைப் பாதுகாப்பதற்கான மென் பொருள் பாதுகாப்பு முறைகள் 3 தருக.
   4) வரைவியல் மென்பொருள்களுக்கு உதாரணம் 3 தருக.
   5) காணொளி பதிப்பு மென பொருள்களுக்கு உதாரணம் 2 தருக.
   6) கணினி வன்பொருள்களுக்கு உதாரணம் 5 தருக.

(4 + 3 + 3 + 3 + 2 + 5 = 20 புள்ளிகள்)

4. 1) பணிச்செயல்முறைமைக்கு 3 உதாரணம் தருக?
   2) திறந்த மூல மென்பொருளுக்கு 2 உதாரணம் தருக ?
   3) உமக்குத் தெரிந்த மென்பொருள்களில் 3 இனைக் குறிப்பிடுக ?
   4) கணினியின் சிறப்பியல்புகள் 3 தருக?
   5) கணினி உட்பொதிந்த சாதனங்களுக்கு 3 உதாரணம் தருக ?
   6) இணையத்தின் மூலம் பெறக்கூடிய 2 சேவைகள் தருக ?
   7) காந்த ஊடக சேமிப்பு சாதனங்களுக்கு 2 உதாரணம் தருக ?
   8) வெளியீட்டு சாதனங்கள் 2 குறிப்பிடுக ?

(3 + 2 + 3 + 3 + 3 + 2 + 2 + 2 = 20 புள்ளிகள்)